# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

## ஆணை நாள் – 08.04.2026

## முன்னிலை

## திரு மு. நடேசன், எம்.எஸ்சி., எல்.எல்.பி.,
## மாநில தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண்.SA.2877/C/2024

திரு A.P. அஸ்மத் அலி .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /ஆராய்ச்சி அலுவலர்,
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகம்,
வனத்துறை தலைமையிடம்,
வேளச்சேரி முதன்மை சாலை,
கிண்டி, சென்னை - 600 032. .. பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 03.08.2023 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 17.10.2023 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 04.03.2023 |

*******

## ஆணை

இவ்வழக்கு இன்று (08.04.2026) இவ்வாணையத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மனுதாரர் திரு A.P. அஸ்மத் அலி என்பவர் இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. மேலும், அவரது 01.04.2026 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தேர்தல் பணியின் காரணமாக இன்றைய விசாரணைக்கு தன்னால் ஆஜராக இயலாது என அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார் ஆணையம் அதனை பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி மா. சுமதி, ஆராய்ச்சி அலுவலர், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) அலுவலகம், வனத்துறை தலைமையிடம், கிண்டி, சென்னை என்பவர் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், சென்னை, கிண்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், கீழ்க்கண்ட விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

I had submitted a complaint before the Honourable Central Empowered Committee, New Delhi against one Shylesh Bansali of Mahavir Plantations, Naduvattam, Nilgiris regarding illegal occupation of lands which includes forest lands. I also sought verification of his alleged patta.

The Central Empowered Committee vide their reference in File No.1-26/CEC/SC/2022-Pt.68 dated 22nd December 2022 was pleased to direct the PCCF to take appropriate action. However, no tangible action appears to have been taken in the matter so far.

A copy of the NOTE FILE maintained in the file of PCCF with respect to the above reference of CEC.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (08.04.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு Ref.No.RTI/22580/2023 நாள் 25.10.2024 மற்றும் Ref. No.1598/2024/L நாள் 24.11.2024 ஆகிய தேதிகளிட்டு ஏற்கெனவே தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், பொதுத் தகவல் அலுவலரின் வாயிலாக ஏற்கெனவே மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களை இவ்வாணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு அத்தகவல்கள் போதுமானது எனக்கருதி, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.

**ஒம்/- (மு. நடேசன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.2877/C/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் / ஆராய்ச்சி அலுவலர்,
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகம்,
வனத்துறை தலைமையிடம்,
வேளச்சேரி முதன்மை சாலை,
கிண்டி, சென்னை - 600 032.

**<u>வழக்கு எண்.SA.2877/C/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு A.P. அஸ்மத் அலி,
எண்.185, இராஜாஜி நகர்,
குன்னூர், நீலகிரி மாவட்டம் - 643 102.

Copy to: File
SNPS / 09.04.2026